# பேசும் குகை

TAM207A

(Source: https://www.youtube.com/watch?v=nbpL-6rJ2JY)

**ஆசிரியருக்கான குறிப்புகள்:**

- பேசும் குகை கதையைப் படங்களாகக் காட்டப் போவதாகக் குழந்தைகளிடம் கூறவும்.
- என்ன மாதிரியான கதை? யார் யார் கதையில் வருவார்கள்? என்று குழந்தைகளை யூகிக்க வைக்கவும்.
- ஒவ்வொரு படங்களையும் காட்டும் பொழுது கதையில் என்ன நடக்கிறது, அடுத்து என்ன நடக்கும், கதையின் முடிவு என்னவாக இருக்கும் என்பனவற்றைச் சொல்லுமாறு குழந்தைகளைத் தயார் செய்யவும்.
- ஒவ்வொரு படமாகக் குழந்தைகளிடம் காட்டி, படத்தின் பின்னுள்ள கேள்விகளைக் கேட்கவும்.
- குழந்தைகளின் பதில்களை, அவர்களிடம் கலந்தாலோசித்துப் பின் அவர்கள் கூறியவாறு, அவர்களின் மொழியிலேயே கரும்பலகையில் எழுதவும்.

## I. படம் பார்த்துக் கதை உருவாக்குதல்:



ஒரு காட்டில் ஒரு சிங்கம் மிகுந்த பசியோடு இருந்தது. அதற்கு ஏதாவது உணவு கிடைக்குமா என்று காடு முழுவதும் தேடி அலைந்தது. அது ஒரு குகையைப் பார்த்தது.





குகைக்குள் ஏதேனும் உணவு கிடைக்கும் என்று நினைத்து உள்ளே சென்றது. ஏதேனும் விலங்கு வருகிறதா என்று காத்துக்கொண்டு இருந்தது.





நரி உணவு சாப்பிட்டு விட்டு தன் குகைக்குத் திரும்பி வந்தது. தரையில் சிங்கத்தின் கால்தடத்தைப் பார்த்தது. ஒரு சிங்கம் குகைக்கு உள்ளே இருக்கிறது; நான் உள்ளே சென்றால் அது என்னைச் சாப்பிட்டு விடும் என்று நினைத்தது.





நரி யோசித்து விட்டு, குகையிடம், "வணக்கம் நண்பா" என்றது. பேசாமல் இருந்த குகையிடம், "இன்று ஏன் என்னிடம் பேசவில்லை?" என்று கேட்டது. இது பேசும் குகையாக இருக்குமோ என்று நினைத்து சிங்கம், "வணக்கம்" என்று கூறியது.





சிங்கம் குகைக்கு உள்ளே இருப்பது உறுதியாகத் தெரிந்தது. "எந்த குகையாவது பேசுமா? முட்டாள் சிங்கமே!" என்று கூறிவிட்டு ஓடி விட்டது.

## II. கதையை வாசித்தல்:


கதைப்படங்களைக் காட்டி, ஆசிரியர் மாணவர்களோடு சேர்ந்து கதையை உருவாக்குதல்


அனைத்து மாணவர்களும் உரையாடி, முடிவுசெய்யும் கதைவரிகளைக் கரும்பலகையில் எழுதுதல்


ஆசிரியர் கதைப்புத்தகத்தை மாணவர்களுக்காக வாசித்தல்


மாணவர்கள் தங்கள் உருவாக்கிய கதையையும் புத்தகக் கதையையும் ஒப்பிட்டுத் திருத்தம் செய்தல்


மாணவர்கள் இருவர் இருவராக அமர்ந்து கதைகயை வாசித்தல்

## III. கதையின் கருவைக் கலந்துரையாடல்:

IV. நரி சிங்கத்தின் கால்தடத்தைப் பார்க்காமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

V. சிங்கம் பதில் பேசாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

VI. பேசக்கூடாத இடத்தில் பேசினால் என்ன ஆகும்?

## I. தொடர் செயல்பாடுகள்:

1. குழுச் செயல்பாடு: இக்கதைக்கான கதைவரைபடத்தை உருவாக்கு. (மாணவர்கள் கதையின் சுருக்கத்தை வாக்கியங்களாகவோ அல்லது படங்களாகவோ உருவாக்கலாம்). மாதிரி கதைவரைபடம்



2. குழுச் செயல்பாடு: நரி குகைக்கு உள்ளேயும் சிங்கம் வெளியேயும் இருந்தால் கதை எப்படி முடிந்திருக்கும் என்று படம் வரைந்து எழுது
3. தனியாள் செயல்பாடு :நரி ஓடியபின் சிங்கம் என்ன செய்திருக்கும் என்று கதையைத் தொடர்ந்து எழுது
4. தனியாள் செயல்பாடு :நீ நரியாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?

## II. இக்கருத்தைக் கூறும் வேறு சில கதைகள்:

1. ஒரு ஆடுகாட்டில் புல் மேய்ந்து கொண்டிருந்தது. மழை வந்ததால் ஒரு குகையில் ஓய்வெடுத்தது. சிங்கம் வந்தது. ஆடு “நான் சிங்கங்களைச் சாப்பிடுபவன்” என்று உரக்கச் சொன்னது. சிங்கம் பயந்து ஓடியது. நரி அதனைத் தன் காலில் கட்டி அழைத்து வந்தது…
2. பேசும் ஆமை: குளத்தில் நீர் வறண்டதால் அங்கு வாழ்ந்துவந்த பறவைகள் வேறு இடத்திற்குச் செல்ல முடிவெடுத்தன. ஆமையும் அவைகளுடன் சேர்ந்து செல்ல ஆசைப்பட்டது. ஒரு குச்சியின் இருமுனைகளை அன்னங்கள் பிடித்துக்கொள்ள நடுவே ஆமை தன் வாயால் கவ்விக்கொண்டது. அவை ஒரு கிராமத்திற்கு மேலே பறந்து கொண்டிருந்தன… https://www.youtube.com/watch?v=M1KF6_9HHHM